3. விதி 110–ன்கீழ் அறிக்கை

கடல் நீரை நன்னீராக்கும் நிலையங்கள் அமைத்தல், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதிய குடிநீர், கழிவு நீர் மற்றும் கட்டமைப்புத் திட்டங்கள் அறிமுகம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தலைநகராகவும், இந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களில் ஒன்றாகவும் விளங்கிவரும் நவீனமும், பாரம்பரியமும் மிக்க சென்னை மாநகரத்தை எழிலார்ந்த சென்னையாக உருவாக்கும் அதே சமயத்தில், சென்னை மாநகரத்துடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளும் சென்னை மாநகருக்கு நிகராக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில், அதற்குத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது.*

சென்னை மாநகரத்தில் நிலவி வந்த குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கும் வகையில், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 2004 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்கும் புதிய வீராணம் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இது தவிர, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை மீஞ்சூரில் நிறுவுவதற்கான நடவடிக்கைகளும் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில்தான் எடுக்கப்பட்டன.

அந்த வகையில், பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையில், நெம்மேலியில் தற்போது நிறுவப்பட்டுள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில் காலியாகவுள்ள 10.50 ஏக்கர் நிலத்தில் 1,000 கோடி ரூபாய் மதிப்பில் கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2013 ஏப்ரல் 16] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 11–25

இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதன்மூலம், விரிவாக்கப்பட்ட சென்னை மாநகரின் தென்பகுதியில் அமைந்துள்ள ஆலந்தூர், பெருங்குடி, கொட்டிவாக்கம், புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, மடிப்பாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி மற்றும் ஒக்கியம்–துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் குடியிருக்கும் சுமார் 6.46 இலட்சம் மக்கள் பயனடைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சென்னைக்கு அருகில் உள்ள பட்டிபுலம் பகுதியில் எதிர்காலத்தில் 400 மில்லியன் லிட்டர் வரை விரிவாக்கம் செய்யக்கூடியவகையில், 200 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் ஒன்றினை 4 ஆண்டுகளுக்குள் அமைத்திட எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு தொடங்கப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்மூலம் 192 கோடியே 2 இலட்சம் ரூபாய் 2012–2013 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு, 9 பகுதிகளில் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 303 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம், மணலி, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், பள்ளிக்கரணை, கொட்டிவாக்கம், சின்னசேக்காடு, முகலிவாக்கம், பெருங்குடி மற்றும் பாலவாக்கம் ஆகிய 14 பகுதிகளில் வசிக்கும் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றும்வண்ணம், குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன்மூலம் 3.47 இலட்சம் மக்கள் தங்கள் வீடுகளிலேயே குழாய்மூலம் குடிநீர் பெற்றுப் பயனடைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னை நகருடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளான சூரப்பட்டு, கதிர்வேடு, நொளம்பூர் மற்றும் முகலிவாக்கம் ஆகிய நான்கு பகுதிகளில் 121 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவு நீரகற்றும்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 ஏப்ரல் 16

கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன்மூலம் இப்பகுதிகளில் வசிக்கும் 80,000 மக்கள் பயன் அடைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை நகர மையப் பகுதிகளில் உள்ளது போன்ற நவீன மின் விளக்குகள் ஒரே சீராக மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளிலும் பொருத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்துடனும், மின்சாரத்தைச் சேமிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடனும் 1,10,000 எண்ணிக்கையில் மின்சாரத்தைச் சேமிக்கும் வகையிலான தெரு விளக்குகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் பொருத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகருக்கு நிகராக, புதிதாக இணைக்கப்பட்டுள்ள விரிவாக்கப் பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெரு விளக்குகள், நடைபாதைகள், தெரு கலன்கள் மற்றும் சேவைத் துறையினருக்கான அமைப்புகள், அதாவது Ducts ஆகியவற்றைக் கொண்ட ஒருங்கிணைந்த சாலைகளை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் சென்னைப், பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் நிதி ஆண்டில் 175.36 கிலோ மீட்டர் நீளமுள்ள 360 எண்ணிக்கையிலான சாலைகளில் 333 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) 2012–2013 ஆம் நிதியாண்டில் 122 கிலோ மீட்டர் நீளமுள்ள 513 எண்ணிக்கையிலான உட்புறச் சாலைகளில் 253 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, 2013–2014 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப் பகுதிகளில் 225 கிலோ மீட்டர் நீளமுள்ள 900 சாலைகளில் ஒருங்கிணைந்த சாலைகள் 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள்மூலம் சென்னை விரைவில் எழில்மிகு சென்னையாக உருவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)